நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்புதான், ஆதிதிராவிடர்கள், குறிப்பாக கல்வியிலே முக்கியத்துவம் பெற வேண்டும், கல்விக்காக அதிக நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும், கல்வியில் முன்னேறினால்தான் ஒரு சமூகம் முன்னுக்கு வர முடியும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பாக, பெண்கள் 11-வது, 12-வது படிக்கின்ற பெண்கள், பள்ளிக்குச் சென்று படிப்பதற்கு - கல்வியில் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து, அதிகம் முன்னுக்கு வரவேண்டும் என்கிற அந்தச் சீரிய நோக்கோடு - இலவசமாக மிதி வண்டிகளை வழங்கியிருக்கின்றார்கள். 56,525 மிதி வண்டிகள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டும் 47,000 மிதி வண்டிகள் வழங்குவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கி நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாணவிகளுக்கு முதுகலைப் பட்டப் படிப்புவரை இலவசமாகக் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உத்தரவிட்டிருக்கின்றார்கள். கல்விக்கு அதிக ஊக்க நிதி, கிட்டத்தட்ட ஸ்காலர்ஷிப் மட்டும் இந்த ஆண்டு 40 கோடியே 74 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். இந்த அளவுக்கு அதிக நிதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆதிதிராவிடர்கள் முன்னுக்கு வர வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் இல்லை என்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்ற சீரிய முனைப்போடுதான் அல்லும் பகலும் அயராது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழைத்து வருகிறார்கள்; கண்டிப்பாக ஆதிதிராவிட நலத் துறை தமிழ்நாட்டில் முதல் துறையாக வரும் என்பதை இந்த நேரத்தில் மிகப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லிவிட்டார், முடிந்தது, முடிந்துவிட்டது.

13—

பேருந்து வசதி

***8475—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 அக்டோபர் 25]

(அ) ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர், கே.கே. நகர், எளம்பிள்ளை, காகாபாளையம் வரை அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர், கே.கே. நகர், எளம்பிள்ளை, காகாபாளையம் வரை நகரப் பேருந்துகளும், மினி பேருந்துகளும் பகுதி வாரியாக இயக்கப்பட்டு வருவதால் நேரடிப் பேருந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மே.ப. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர் நகரம், எளம்பிள்ளை, காகாபாளையம் வரை 20 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இந்தப் பகுதியில் வழிநெடுக 8 பஞ்சாயத்துகளில் 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். இந்தப் பகுதியில் விசைத் தறி, கைத்தறி நெசவுத் தொழில் செய்ய மக்கள் அதிக தூரம் செல்ல வேண்டியிருப்பதால், இடையிடையே பஸ்கள் அந்தத் தூரத்தில் செல்ல முடியவில்லை. பாதியிலேயே அந்த பஸ்கள் நின்று விடுவதால், அந்தப் பகுதி cut-ஆகி விடுகிற காரணத்தினாலே, அந்த தூரத்தை அடைய முடியவில்லை. மேலும், இந்த டவுன் பஸ் வேண்டி நீண்ட காலமான கோரிக்கை அந்த மக்களிடத்திலே இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லை என்று சொன்னாலும் மறு பரிசீலனை செய்து, அதிகமாக பாட்டாளி மக்கள் வசிக்கக்கூடிய, ஏழை மக்கள் வசிக்கக்கூடிய அந்தப் பகுதிகளுக்கு, டவுன் பஸ் விட அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பாட்டாளி மக்களா, பாட்டாளி மக்கள் கட்சியா? (சிரிப்பு)*

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி வரை 8 நகரப் பேருந்துகள், 118 நடைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. முத்துநாயக்கன்பட்டி -கே.ஆர். தோப்பூர் வழித் தடத்தில் இரண்டு மினி பேருந்துகள் 36 .நடைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.*

முத்துநாயக்கன்பட்டி-கே.ஆர். தோப்பூர் வழித் தடத்தில் ஒரு நகரப் பேருந்து 4 நடைகள் இயக்கப்படுகின்றது. கே.ஆர். தோப்பூரிலிருந்து, எளம்பிள்ளை வரை உள்ள வழித் தடத்தில் 2 மினி பேருந்துகள் 36 நடைகள் இயக்கப்படுகின்றன. எளம்பிள்ளை — காகாபாளையம் வழித் தடத்தில் 18 நகரப் பேருந்துகள் 136 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆக, இந்த அளவுக்கு இந்தப் பகுதி மக்களுக்கு தேவைக்கு அதிகமாகவே அந்தப் பகுதியிலே பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த வழித் தடத்தில் கூடுதலாக, நேரடியாக, புதியதாக பேருந்து வசதி ஏற்படுத்துவதற்குத் தேவை எழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய உள்நோக்கம் 20 கிலோமீட்டர் இருக்கக்கூடிய அந்தத் தூரத்தைக் கடக்க சுமார் 5 பேருந்து மாறி மாறிச் சென்று, ஒரு பாட்டாளி தன்னுடைய விதைத் தொழிலைச் செய்ய வேண்டியுள்ளது. விவசாயக் கூலிக்கு அந்த இடங்களை மாற்றி மாற்றிச் செல்ல எவ்வளவு காலதாமதம் ஏற்படும் என்பதனை இந்த அரசு சிந்தித்து, எளம்பிள்ளையிலிருந்து ஓமலூர் வரையும், காகாபாளையத்திலிருந்து ஓமலூர் வரையும் நகரப் பேருந்து விட இந்த அரசு முன்வருமா என்பதனை ஏழைகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப பயமுறுத்தாதீர்கள்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய தேவைக்கேற்ப இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கோரிக்கைகளைப் பரிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.